# கரூர் தோட்டக்கலை துணை இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ஆணை

## முன்னிலை : திரு.எம்.எஸ்.மோகன்ராம் பி.எஸ்ஸி (தோ.க)

ந.க.எண்.அ3/528/2019 நாள்:30.12.2019

பொருள்: பணிக்குழு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி –IV ல் அடங்கிய பணிகள் நேரடித் தேர்வு 2015-2016, 2016-2017 மற்றும் 2017-2018 ஆம் ஆண்டில் தட்டச்சர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு பணி நியமனம் வழங்கப்பட்டது – தட்டச்சர் பதவியில் பணிவரன்முறை செய்து உத்தரவிடுதல் – தொடர்பாக.

பார்வை:

1. செயலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் கடிதம் எண்:4692/PSD – A/2018, நாள்:22.12.2018.
2. சென்னை–5, வேளாண்மை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண்:அநிபி3/7551/2019, நாள்:01.03.2019.
3. சென்னை–5, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண்:அபபி2/3906/2019, நாள்:05.03.2019.
4. சென்னை–5, தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண்:அபபி4/4242/2015, நாள்:31.05.2016.

*********

உத்தரவு:

பார்வை–1ல் காணும் கடிதத்தின்படி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்திய தொகுதி –IV ல் அடங்கிய பணிகள் நேரடித் தேர்வு 2015-2016, 2016-2017 மற்றும் 2017-2018 ஆம் ஆண்டில் தட்டச்சர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு பார்வை–2ல் காணும் செயல்முறை ஆணையின்படி தோட்டக்கலைத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை–3ல் காணும் செயல்முறை ஆணையின்படி கரூர் தோட்டக்கலை துணை இயக்குநர் அலுவலகத்திற்கு தட்டச்சராக பணி நியமனம் வழங்கப்பட்ட திருமதி.ரா.கலையரசி அவர்கள் கரூர் தோட்டக்கலை துணை இயக்குநர் அலுவலகத்தில் 08.03.2019 முற்பகல் முதல் தட்டச்சராக பணியில் சேர்ந்து கொண்டார்.

பார்வை–4ல் காணும் கடிதத்தின்படி தட்டச்சர் பதவியில் பணிவரன்முறை செய்வது தொடர்பாக வழங்கப்பட்டுள்ள தெளிவுரையின்படி தனியர் தட்டச்சராக பணியில் சேர்ந்த நாளான 08.03.2019 முற்பகல் முதல் தட்டச்சர் பதவியில் பணிவரன் முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

இவர் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டு கால தொடர் பணியில் இரண்டாண்டு காலம் தகுதிகாண் பருவத்தில் இருத்தி வைத்து உத்தரவிடப்படுகிறது. மேற்படி தனியருக்கு தகுதிகாண் பருவம் முடித்த பின்னரே இரண்டாவது மற்றும் தொடர் ஊதிய உயர்வுகள் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நிர்ணயிக்கப்பட்ட துறை தேர்வுகளில் தேர்ச்சி பெறும் வரை இரண்டாவது மற்றும் அதனை தொடர்ந்து ஊதிய உயர்வுகளை பெறத் தகுதியில்லை எனவும் நிர்ணயிக்கப்பட்ட தேர்வுகளை ஏற்கனவே எழுதித் தேர்ச்சி பெற்றிருந்தால் மீண்டும் எழுதி தேர்ச்சி பெறத் தேவையில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தோட்டக்கலை துணை இயக்குநர்
கரூர்

பெறுநர்:

திருமதி.ரா.கலையரசி,
தட்டச்சர்,
இவ்வலுவலகம்.

நகல்:சென்னை–5, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.

நகல்: சென்னை-5, வேளாண்மை இயக்குநர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.

நகல்:கரூர், வேளாண்மை இணை இயக்குநர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.

நகல்:பணிப்பதிவேட்டிற்கு.